**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.38/2020
Prosecution witness.4

| | |
|---|---|
| பெயர் : சித்திரைவேலு | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of November 2024.

13.11.2024

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் சமையல் வேலை செய்கிறேன். அ.சா.1 இராமசாமி எனது அண்ணன் ஆவார். எனது அண்ணன் அ.சா.1 வீடும் எனது வீடும் அருகில் உள்ளது. 29.04.2019 ம் தேதி நான் பொசுக்குடியில் உள்ள எனது வீட்டிற்கு சமையல் வேலையை முடித்துவிட்டு வந்தேன். அன்றைய தினம் இரவு 08.00 மணியளவில் எனது அண்ணனின் மைத்துனரான 1ம் எதிரி ராமமூர்த்தி , 2 ம் எதிரி கிருஷ்ணன் மற்றும் ராமமூர்த்தி மனைவியும் வந்தார். அவரது பெயர் தற்போது எனக்கு ஞாபகமில்லை.

2) 1ம் எதிரி ராமமூர்த்தி எனது அண்ணன் அ.சா.1 யிடம் 1ம் எதிரியின் தங்கையான அ.சா.2 பூர்ணவள்ளியை குடித்து விட்டு ஏன் இம்சை செய்கிறாய் என்று கேட்டார். உடனே 1ம் எதிரி ராமமூர்த்தி எனது அண்ணன் அ.சா.1 ராமசாமியை கம்பை வைத்து உடல் முழுவதும் அடித்தார். அங்கிருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) இந்த வழக்கின் அ.சா.1 இராமசாமி எனது அண்ணன் என்றால் சரிதான். அ.சா.1 இராமசாமி, அ.சா.2 பூர்ணவள்ளி கணவன் மனைவி என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 அவர்களுக்கிடேயே அடிக்கடி பிரச்சனை ஏற்படும் என்றால் சரிதான். இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 அவர்களுக்கிடையே ஏற்பட்ட சண்டையை அ.சா.2 ஆன பூர்ணவள்ளிக்கு தீக்காயம் எற்பட்டது என்றால் சரிதான். காயம்பட்ட அ.சா.2 ன் உடன் பிறந்தவர்கள்தான் ராமமூர்த்தி, கிருஷ்ணன் என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிகள் கொடுத்த புகாரி மீது அ.சா.1 ன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) சம்பவம் நடக்கும் போது சம்பவ இடத்தில் யாரும் இல்லை என்றால் சரிதான். காவல் துறையினர் எங்கு, எத்தனை மணிக்கு என்னை விசாரித்தார்கள் என்றால் 29.04.2019 ம் தேதி இரவு 09.00 மணியளவில் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.